முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**GWOP No. 95/2025**

**நாள்.07.03.2026**

ம.சா.1 திருமதி.லிங்கலெட்சுமி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

மனு சொத்தானது எனக்கும் எனது மைனர் குழந்தைகளுக்கும் எனது கணவர் வழியில் பாத்தியமான பொதுசொத்து என்றால் சரிதான். மைனர்களின் தாயார் என்ற முறையில் நான்தான் மைனர் குழந்தைகளை பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மைனர் குழந்தைகளின் சித்தப்பா என்றால் சரிதான். நான் உறவினர்களிடம் அவ்வப்போது உதவி கேட்டு மைனர் குழந்தைகளை பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். மனு சொத்தை பொறுத்தவரை எனக்கு 1/3 பாகமும், மைனர் குழந்தைகளுக்கு 2/3 பாகமும் உள்ளது என்றால் சரிதான். மனு சொத்தானது சிறிய இடமாக இருப்பதால், எனது பாகத்தை மட்டும் தனியாக பிரித்து விற்க முடியாது, முழு சொத்தையும் சேர்த்துதான் விற்க முடியும் என்றால் சரிதான். அவ்வாறு மைனர் குழந்தைகளின் பாகத்தையும் சேர்த்து விற்பனை செய்தால், அந்த தொகையை மைனர் குழந்தைகளின் பராமரிப்பிற்கு செலவு செய்வேனா என்றால் செய்வேன்.

மறு விசாரணை –இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.07 15:05:37 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .